சுற்றாடல் அமைச்சு

வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு

# அறிவித்தல்

## 2022 ஆம் ஆண்டில் ஐதரோகுளோரோபுளோரோ காபன் (HCFCs) இறக்குமதிக்கான ஒதுக்கீட்டினை (Quota) பெற்றுக்கொள்வதற்காகப் பதிவுசெய்தல்

1989 ஆம் ஆண்டிலிருந்து ஓசோன் படையினைக் குறைக்கும் பதார்த்தங்கள் தொடர்பிலான மொன்றியல் உடன்படிக்கைக்கான ஒரு தரப்பாக இலங்கை உள்ளது. மொன்றியல் உடன்படிக்கையின் கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையில் தேசிய செயற்பாட்டு மையமாக சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு தொழிற்பட்டுவருகின்றது.

மொன்றியல் உடன்படிக்கைத் தரப்பினர்களின் 19 ஆம் கூட்டத்தின் XIX/6 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக ஒழுங்குமுறையாகவும் கட்டங்கட்டமாகப் படிப்படியாகவும் ஐதரோகுளோரோபுளோரோ காபன் (HCFCs) உற்பத்தியையும் நுகர்வையும் குறைப்பதற்கு மொன்றியல் உடன்படிக்கையின் சகல உறுப்பு நாடுகளும் இணங்கிக்கொண்டுள்ளன. அதற்கிணங்க, வருடாந்த நுகர்வுக்கான HCFCs இன் உச்சபட்சமாக அனுமதிக்கக்கூடிய எல்லைகளானவை ஒவ்வொரு உறுப்பு நாட்டினாலும் வரையறுக்கப்பட்டுள்ளன. மொன்றியல் உடன்படிக்கை ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, அடிப்படை அளவுகோலிலிருந்து (13.9 ODPT) HCFC நுகர்வின் 35% குறைப்பானது 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதிக்கான இறக்குமதி ஒதுக்கீட்டின் அளவானது இக்குறைப்பு இலக்கின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. அதிகாரிகள் குழுவொன்றினால் வகுக்கப்பட்ட முறைமையொன்றைப் பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் தகுதியான வியாபார நிறுவனங்களுக்கிடையே இவ்வருடாந்த HCFCs ஒதுக்கீட்டினை சுற்றாடல் அமைச்சு பகிர்ந்தளிக்கின்றது.

அதற்கிணங்க, கடந்த 05 வருடங்கள் (2017-2021) அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களாக குளிர் பதனூட்டிகளின் (refrigerants) இறக்குமதியில் ஈடுபட்டுள்ள வியாபார நிறுவனங்கள் / அல்லது குளிர்சாதனப்பெட்டிகளை அல்லது காற்றுப்பதனாக்கிகளை (air conditioners) ஒன்று சேர்த்து பொருத்துதல், பராமரித்தல் அல்லது காலக்கிரமத்தில் பழுதுபார்த்தல் சேவை (servicing) தொடர்புபட்ட செயற்பாடுகளில் தமது ஈடுபாட்டை நிரூபிக்கக்கூடிய நிறுவனங்கள் என்பனவும் 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவையாகக் காணப்படும். 2022 ஆம் ஆண்டுக்கான HCFC ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள வியாபார நிறுவனங்களிடம் பின்வரும் வகுதிகளில் ஒன்றின் கீழ் சுற்றாடல் அமைச்சுக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்குமாறு இத்தால் கோரப்படுகின்றது:

1. கடந்த 05 வருட (2017-2021) காலப்பகுதியின் போது குளிரூட்டல் (refrigeration) மற்றும் காற்றுப்பதனாக்கல் (air-conditioning) துறையில் ஒன்று சேர்த்து பொருத்துதல், பராமரித்தல் மற்றும் காலக்கிரமத்தில் பழுதுபார்த்தல் சேவை என்பவற்றை வழங்கும் வியாபார நிறுவனங்கள்.
2. கடந்த 05 வருட (2017-2021) காலப்பகுதியின் போது ஐதரோகுளோரோபுளோரோ காபன் (HCFCs) குளிர் பதனூட்டிகளின் (refrigerants) இறக்குமதியில் மாத்திரம் ஈடுபட்டுள்ள வியாபார நிறுவனங்கள்.

பதிவிற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது கீழே குறிப்பிடப்பட்ட தகவல்களை வழங்குதல் கட்டாயம் என்று விண்ணப்பதாரிகளுக்கு அறியத்தரப்படுகின்றது:

1. நிறுவனத்தின் பெயர்:
2. உரிமையாளரின் பெயர்:
3. நிறுவனத்தின் முகவரி:
4. உரிமையாளரின் தனிப்பட்ட முகவரி:
5. தொலைபேசி இலக்கமும் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியும்:
6. வியாபாரப் பதிவிலக்கமும் திகதியும்:
7. வியாபாரத்தின் தன்மை:
8. வருமான வரி இலக்கம் (ஏற்புடையதாயின்):
9. வரிசெலுத்துநர் அடையாள (TIN) இலக்கம் (ஏற்புடையதாயின்):
10. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) இலக்கம் (ஏற்புடையதாயின்):
11. ஐதரோகுளோரோபுளோரோ காபன்களின் (HCFCs) இறக்குமதியில் அல்லது HCFCs குளிர் பதனூட்டிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் பராமரித்தல், காலக்கிரம பழுதுபார்த்தல் சேவை (service) ஒன்றுசேர்த்துப் பொருத்துதல் நிறுவுதல் அல்லது என்பவற்றிலான அனுபவப் பதிவுகள்.

    (கடந்த 05 வருட (2017-2021) காலப்பகுதியின் போது இறக்குமதி செய்யப்பட்ட / நிறுவுதல், பராமரித்தல், வழங்கப்பட்ட காலக்கிரம பழுதுபார்த்தல் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்ட HCFCs குளிர் பதனூட்டி வகை மற்றும் அளவுகள்)
12. 2022 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்வதற்கு உத்தேசிக்கப்படும் HCFC குளிர் பதனூட்டிகளின் வகையும் அளவும் (கிலோ கிராம் (Kgs)):

மேற்போந்த தகவல்களை சரிபார்ப்பதற்கான துணை ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளானவை விண்ணப்பங்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். துணை ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வழங்கப்பட்ட ஆவணங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் ஒவ்வொரு தகுதியான விண்ணப்பதாரிக்கும் ஒதுக்கீட்டுப் பகிர்வைப் பரிந்துரைப்பதற்குமென தொழில்நுட்ப அதிகாரிகள் குழுவொன்றினால் (அவசியப்படுமாயின்) நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். இச்செய்முறை தொடர்பில் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாக இருக்க வேண்டும்.

ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து பதிவிற்கான விண்ணப்பங்களானவை 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று பி.ப. 4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் பணிப்பாளர், வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு, சுற்றாடல் அமைச்சு, “சொபாதம் பியச”, 416/சீ/1, ரொபேர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரியிடப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது noulanka@gmail.com இற்கு மின்னஞ்சல் மூலமோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். இது தொடர்பிலான மேலதிக விபரங்களை 0112034221, 0112034218 எனும் இலக்கங்களுக்கூடாக தொலைபேசி வாயிலாக அல்லது noulanka@gmail.com இற்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பிவைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்**
**சுற்றாடல் அமைச்சு**
**பத்தரமுல்லை**